# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

தீபம் - 80 மார்கழி Email : theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs.40/=




## ஆயரின் ஆசிச் செய்தி

**கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!**

வருட நிறைவில் பல அனுபவங்களோடு நாம் பயணிக்கின்றோம். இவ்வருடம் பொருளாதார நெருக்கடி எம்மை மிகவும் பாதித்துவிட்டது. மக்களின் அவலம் முன்னெப்போதும் இல்லாதவாறு மோசமாகி விட்டது. இந்நிலையில் இவ்வருட கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் எவ்வாறு கொண்டாடுவது?

இறைவன் மனிதனாக அவதரித்த மாபெரும் விழா கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழா. இருள் சூழ்ந்த உலகிற்கு ஒளியாக வந்தவர் இயேசு. இயேசுவின் பிறப்பு அன்று யூதரால் உணரப்படாவிட்டாலும் இன்று எமக்கு மிகவும் அர்த்தமுள்ளதாக அமைந்துள்ளது. "ஆனால் காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்." (கலா 4:4.5) இறைவனின் திட்டத்தை முழுமையாக அறிந்துகொள்ள எமக்கு சக்தியில்லை. ஆனால் அவரது திட்டம் முழுமையானது. "தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. இவ்வாக்கு கடவுளாயும் இருந்தது" (யோவா1:1). இவ்வாறு குறிப்பிடும் நற்செய்தியாளர் யோவான் மனிதனின் அறியாமையையும் குறிப்பிடுகின்றார். "ஒளியான அவர் உலகில் இருந்தார். உலகு அவரால்தான் உண்டானது. ஆனால் உலகு அவரை அறிந்துகொள்ளவில்லை."

இறைவனின் திட்டம் பற்றிய அறியாமை அன்றுமுதல் இன்றுவரை வெவ்வேறு வடிவங்களில் தொடர்கின்றது. கிறிஸ்து பிறப்பை இன்று உலகமே கொண்டாடுகின்றது பலருக்கு இது வியாபாரம். களியாட்டம். சிலருக்கு இது ஆன்மீகம். இயேசுவின் பிறப்போடு எமது நம்பிக்கை நின்று விடுவதில்லை. அவரது வார்த்தைகள். வாழ்வு. துன்பம். மரணம். உயிர்ப்பு. விண்ணேற்பு. தூய ஆவியானவரின் அருள்பொழிவு இவற்றில் தொடர்கின்றது. தொடக்ககால கிறிஸ்தவர்களின் மறைத்தூதுப் பணி உலக வரலாற்றில் பல வடிவங்கள் பெற்று இன்றும் தொடர்கின்றது.

**தொடர்ச்சி பக்கல் 2ல்**

## திருத்தொண்டராக திருப்பொழிவு

கடந்த 01.10.2022 அன்று காலை 09.30 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் "இதோ நான் வருகிறேன்" என்ற வார்த்தைக்கு ஏற்ப அருட்சகோதரர் எமர்சன் றாகல் அவர்கள் எமது மறைமாநில ஆயர் அவர்களினால் திருத்தொண்டராக அபிஷேகம் செய்யப்பட்டார். இவர் சீனன்குடா பங்கைச் சேர்ந்த திரு. பேனாட் றாகல், திருமதி. ஜெசிமா றாகலின் அன்பு மகனாவார். இவரது பணிவாழ்வு எந்த வித சோதனைகளும் இன்றி உமது பணியே எனது பணி என்பதை மனதில் கொண்டு குருவாக திருஅவையில் பயணிக்க உம் மைந்தனின் மாட்சியில் பேரருளை கொடுக்க செபிப்போம் வாழ்த்துவோம்.








## செபிப்போம் வாழ்த்துவோம்



பேரருட்திரு.
ஜோசப் கிங்ஸ்லி
சுவாம்பிள்ளை ஆண்டகை

மார்கழி 09 பிறந்தநாள்,
மார்கழி 20 குருத்துவ நினைவு நாள்



பேரருட்திரு.
கிறிஸ்டியன் நோயல்
இம்மானுவேல் ஆண்டகை

மார்கழி 25 பிறந்தநாள்

இறைமக்கள்
அன்பர்கள்
வாடிக்கையாளர்கள்
எழுத்தாளர்கள்
அனைவருக்கும் எமது

**நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்**

பேரருட்திரு.
கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

திருகோணமலை மறைமாவட்டம்

## பொது நிலையினர் ஆண்டு - 2023

"ஆன்மீக தாகத்தில் பயணித்திட"

## திருகோணமலை மறைமாவட்டத்தில் அருட்பணியாளர்களின் பணியிட மாற்றங்களும், புதிய நியமனங்களும்

பக்கம் 7ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்டத்தில் மறைக்கல்வி ஞாயிறு (18.09.2022)

திரு இருதய ஆண்டவர் ஆலயம் - இருதயபுரம்



புனித வனத்து அந்தோனியார் ஆலயம் - செல்வநாயகபுரம்



புனித சூசையப்பர் ஆலயம் - நிலாவெளி



புனித சவேரியார் ஆலயம் - குப்புறுபிட்டி



புனித சதாசகாய அன்னை ஆலயம் - அன்புவழிபுரம்



புனித மரியாள் பேராலயம் - திருகோணமலை



கிறிஸ்து அரசர் ஆலயம் - கன்னியா



குழந்தை இயேசு ஆலயம் - உவர்மலை



புனித யூதா ததேயு ஆலயம் - இலிங்கநகர்



திருமுழுக்கு யோவான் ஆலயம் - சாம்பல்தீவு



புனித லூர்து அன்னை திருத்தலம் - பாலையூற்று



புனித சதாசகாய அன்னை ஆலயம் - கந்தளாய்



பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தின் தேசிய மறைக்கல்வி வாரமானது 11.09.2022 அன்று காலை 8.00 மணிக்கு மறைக்கல்வி கொடி ஏற்றப்பட்டு திருப்பலி பவனியுடன் ஆரம்பமாகியது. அன்றைய ஞாயிறு திருப்பலியை தரம் 11 மாணவர்கள் சிறப்பித்தார்கள். அதனைத் தொடர்ந்து வார நாட்களில் இரண்டு வகுப்புக்களாக இணைந்து தமது மழலை சொற்களால் அழகாகவும். தெளிவாகவும் திருச்செபமாலையை செபித்து முன்னுரை. இறைவார்த்தை. திருப்பாடல். மன்றாட்டுக்கள் ஆகியவற்றை எடுத்துரைத்து எம்மை சிந்திக்க வைத்தனர். குறிப்பாக திருப்பலி வேளையில் பக்தியுடன் கரம் கூப்பி. கண்களை மூடிய வண்ணம் தியானித்தார்கள். இச்செயல்கள் இறைதந்தையுடன் நாம் ஒன்றிணைய ஒரு தூண்டுதலாக அமைந்தது.

இறுதியாக 18.09.2022 அன்று பெற்றோர். மறையாசிரியர்கள். மாணவர்கள் ஒன்றிணைந்து அருட்பணி றொகான் பேர்ணாட் அடிகளாரின் தலைமையில் திருப்பலி காலை 7.00 மணிக்கு ஆரம்பமானது. மறையுரையின் பின் மறையாசிரியர்கள் தம்மை அர்ப்பணித்து அர்ப்பண செபத்தை ஒப்புக்கொடுத்தார்கள். திருப்பலி பக்தியாகவும். சிறப்பாகவும் நிறைவேறியது.

அதன் பின் மாணவர்களுக்கு வகுப்பு ரீதியாக விளையாட்டுக்களும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு பங்குத்தந்தை பரிசில்கள் வழங்கி மகிழ்வித்தார். விசுவாசிகளின் மன்றாட்டுக்களை மனனம் செய்து திருப்பலியில் செபித்த இரு மாணவர்களுக்கு பணப்பரிசு வழங்கி பங்குத்தந்தை அவர்களை வியப்பில் ஆழ்த்தினார். மாணவர்களுக்கு பொங்கலும். குளிர்பானமும் வழங்கப்பட்டது. நிறைவினில் மறைக்கல்வி கொடியானது காலை11.00 மணியளவில் இறக்கப்பட்டு மறைக்கல்வி வாரம் இனிதே நிறைவேறியது.

தகவல் திருமதி A. சகாயம்

"இந்த உலகமே உன்னை திரும்பிப் பார்க்க வேண்டுமானால் நீ யாரையும் திரும்பி பார்க்காதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வழிகாட்டும் பேரொளியாம் இயேசு பாலன்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,
உங்கள் அனைவருக்கும்
ஆண்டவர் இயேசுவின் பிறப்புவிழா
நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு தொடர்கின்றேன்.

மிகுந்த சிரமங்கள் நிறைந்த நாட்களை இலங்கை மக்களாக நாம் அனைவரும் கடந்து வரும் நாட்களில் இயேசுவின் பிறப்பு விழாவானது ஒரு புதிய நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது. இதே போன்றதொரு இருளின் காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த இஸ்ரயேல் மக்களுக்கு எசாயா இறைவாக்கினர் வழியாக இறைவன் அளித்த நற்செய்திதான் "காரிருளில், நடந்து வந்த மக்கள் பேரொளியை கண்டார்கள்." (எசா 9,2) ஏனெனில் மெசியாவின் வருகை அவர்களுக்கு அவர்களின் எதிர்கால வாழ்விற்கான வெளிச்சத்தை அளித்தது. தொடர்ந்து என்ன செய்வது? எப்படி வாழ்வது? எங்கு போவது? எம் எதிர்காலம் என்னவாகும்? என்று விடைதெரியா வினாக்களால் அமிழ்த்தப்பட்டு வாழ்வே சூனியமாகிப்போன மக்களுக்கு இறைவன் அளித்த வாக்குறுதிதான் வாழ்விற்கான பேரொளி. சாதாரணமாக மறைந்துபோகும் ஒளியல்ல மாறாக அனைவருக்கும் வழிகாட்டும், அவர்கள் வாழ்விற்கு வெளிச்சமூட்டும், அவர்கள் பாதையைத் தெளிவாக்கும், தொடர்ந்து வாழ்வில் முன்னேற தென்பூட்டும் ஓர் ஒளியாக இறைவன் இருக்கப்போவதை முன்னறிவிக்கிறார். இதனையே மத்தேயு நற்செய்தியாளர் நம் ஆண்டவர் இயேசுவின் வருகைக்கான முன்னறிவிப்பாக நமக்கு தருகின்றார் (மத் 4,16).

இலங்கை வாழ் இறைமக்களாகிய நமக்கு பொருளாதார நெருக்கடியும், வேலையில்லா பிரச்சனையும், இளையோரின் போதைக்கான அடிமைத் தனமும், உறுதியற்ற அரசியல் தலைமைகளும், ஓர் இருளின் கால அனுபவத்தைத் தந்துள்ள இவ்வேளை நாம் கொண்டாடும் நத்தார் விழா பேரொளியைத் தரும் விழாவாக அமைய வேண்டும் என்று செபிப்போம் அடுத்துள்ளவரை வாழ்த்துவோம். இதோடு வாழ்வு முடிந்துள்ளது என்று நினைத்து சோர்ந்து போயுள்ள மக்களுக்கு இவ்வொளியைச் சுட்டிக்காட்டி புது நம்பிக்கையை ஊட்டுவோம். தொடர்ந்து முன்னேற வழியின்றி தவித்த ஞானிகளுக்கு விண்மீன் வழிகாட்டியாய் அமைந்தது போல நம்மோடு பயணிக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும், பிற நம்பிக்கையில் வாழ்வோருக்கும் நாமும் விடிவெள்ளியாய் பிறந்துள்ள கிறிஸ்துவை சுட்டிக்காட்டி புதுநம்பிக்கை ஊட்டுவோம், புதுபலம் அளிப்போம்.

புலரவிருக்கும் புத்தாண்டு அனைவருக்கும் புது நம்பிக்கை அளிக்கும் ஆண்டாக அமைய நாமும் இறைவனின் கருவிகளாய் மாறுவோம்.

இனிய நத்தார் மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்கள்.

ஆசிரியர்!

### ஆயரின் ஆசீச் செய்தியின் தொடர்ச்சி

பாவத்திற்கு அடிமையான உலகை மீட்கவென இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு வந்து மரணம் வரை இறைத் தந்தைக்குக் கீழ்ப்படிந்திருந்தாலும் அவர் தனது பணி வாழ்வில் நோயுற்றோரைக் குணமாக்கினார். பேய்களை ஓட்டினார். பசித்தோரின் பசியைப் போக்கினார். வாழ்வின் விழிம்பில் உள்ளோரைத் தேடிச் சென்று நன்மைகள் செய்தார். இன்று பொருளாதாரத்தில் அடிமட்டத்திற்குச் சென்றிருக்கும் எமது நாட்டை மீட்டெடுக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் கிறிஸ்தவர் நாம் தேவையில் இருப்போரை மறந்துவிடமுடியாது. கிறிஸ்து பிறப்பு என்பது அன்பின் காலம். பகிர்வின் காலம். இன்று பொருளாதார சூழ்நிலை காரணமாக நலிவுற்ற மக்களுக்கு உதவும் நோக்குடன் இவ்வருட கிறிஸ்து பிறப்புக் காலத்தை ஆடம்பரங்களும் வீண் செலவுகளும் இன்றி தேவையிலிருப்பவரது பசிதீர்க்கும். வலி தீர்க்கும் காலமாக சிறப்பிப்பதே காலத்தின் தேவையாகும். எனவே இக்காலம் அடுத்தவர்க்கு ஆசீர் நிறைந்த காலமாக அமைய நாம் எம்மால் முடிந்த செலவீனங்களைக் குறைத்து அடுத்தவர்க்கு உதவிடுவோம். அதுவே மனம் நிறைந்த கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவாக அமையும்.

குருக்களுக்கான மாற்றங்கள் 2023 ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். கடந்த நான்கு வருடங்களாக பணித்தளங்களில் குருக்கள் அர்ப்பணிப்போடு பணியாற்றியுள்ளார்கள். இவர்களை நன்றியுணர்வோடு வழியனுப்பி வைப்பது எமது கடமை. அதேபோல பணிக்கென புதிதாக வரும் குருவை அன்போடு வரவேற்பதும் எமது கடமையாகும்.

2023ம் ஆண்டு "பொதுநிலை ஆண்டு" என நாம் பிரகடனப் படுத்துகின்றோம். இது 2023 ஜனவரி மாதம் முதலாம் திகதி முறையாகப் பிரகடனப்படுத்தப்படும். இதன் செயல்பாடுகளுக்கான மேலதிக விபரங்கள் எமது மேய்ப்புப் பணி திருமடலில் தரப்படும். இம் மேய்ப்புப்பணித் திருமடல் ஜனவரி மாதம் 8ம் திகதி ஞாயிறு திருப்பலியின்போது வாசிக்கப்படும்.


நிறைவாக. இக்கிறிஸ்து பிறப்புக் காலத்தை ஆன்மீகமும் பகிர்வும் நிறைந்த காலமாக மாற்றிடுவோம். இறைவனின் அருளும் ஆசீரும் எப்போதும் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் வழிநடத்தட்டும்.

உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

## படித்ததில் பிடித்தது

# திறவுகோல்



ஓவியர் ஹெல்மன்.
மெய் சிலிர்க்க வைக்கும்
சித்திரம் ஒன்றை வரைந்தார்.
அதில்...
மூடியிருக்கும் கதவைக் கடவுள்
தட்டிக்கொண்டிருந்தார்.

பார்வைக்கு வைக்கப்பட்டது
ஓவியம்.
பார்த்தவர் அனைவரும்
பரவசமடைந்தனர்.
தத்ரூபமான ஓவியத்தைக்
கண்டு வியந்தபடி சென்றனர்.

ஒருவர் மட்டும் குறை நொட்டாங்கு சொன்னார்:
"ஓவியத்தின் கதவில் சாவித் துவாரம் இல்லையே...!
சாவியில்லாக் கதவை எப்படித் திறப்பதாம்?"

ஹெல்மன் புன்னகையுடன் சொன்னார்:
"தம்பி... சாவித் துவாரமும் சாவியும் வெளியில் இல்லை.
உள்ளேதான் இருக்கிறது.
உள்ளே இருக்கும் நீ தான் கதவைத் திறக்க வேண்டும்."

பொருள் கேட்டு நின்றவர்களிடம் ஓவியர் சொன்னார்:
"தரிசனம் கதவைத் தான் தட்டும்.
தரிசனம் பெற வேண்டியது நீர் தாம்...!"

அக்கம் பக்கத்தில் இல்லை அக விடுதலை
அது உன் மனதில்...

**அருட்பணி T. கிங்ஸிலி ஹொப்**

# கிறிஸ்மஸ் கரோல்



கிறிஸ்மஸ் என்றாலே இதயங்களில் மகிழ்வையும் அம்மகிழ்சியை ஒருவர் ஒருவரோடு பகிரும் ஓர் அகமகிழ்வின் விழாவாகும். அம்மகிழ்ச்சியை பல்வேறு முறைகளில் நாம் பகிர்ந்துகொள்ளுகின்றோம். அதில் ஒன்று தான் கிறிஸ்மஸ் கரோல் என்று கூறப்படும். நத்தார் கீதங்கள் ஆகும். இப்பாடல்கள் கிறிஸ்து பிறப்பின் செய்தியை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

கரோல் கீதங்கள் முதலில் கிரேக்கர்களாலும். உரோமையர்களாலும் பாடப்பட்டது. இத்தகைய கீதங்களில் புறவினத்தவர்களின் தாக்கம் அதிகமாக காணப்பட்டதனால் ஆலய வழிபாடுகளில் இவற்றைப் பாட அதிக விருப்பம் காட்டப்படவில்லை. ஆனால் திருஅவைக்கு புறப்பே கிறிஸ்து பிறப்பின் கீதங்கள் வலுவாக வளர்ச்சியடைந்து வந்தன. அதிகமான இத்தகைய கீதங்கள் பாமரமக்களின் மொழிநடையிலே பாடப்பட்டு வந்தன. 12ம் நூற்றாண்டிலே வாழ்ந்த திருஅவையின் மறுமலர்ச்சிக்கு அயராது பாடுபட்ட புனித பிரான்சிஸ் அசிசியார் கரோல் கீதங்களை ஆலய வழிபாடுகளில் இறையியல் கருத்துக்களுடன் இணைத்தார்.

புனித பிரான்சிஸ் தாம் பணியாற்றிய பங்கில் கிறிஸ்து பிறப்பின் மறைபொருளை மக்களுக்கு கற்பிக்க புதிய வழிமுறையை மேற்கொண்டார். கிறிஸ்து பிறப்பு நாளன்று மாட்டுக்குடில் ஒன்றை அமைத்து அதிலே "முதல் கிறிஸ்மஸ்" நிகழ்வை நினைவூட்டும் முகமாக திருச்சுரூபங்களை அமைத்தார். அவரின் முயற்சியை கண்ட அன்றைய திருத்தந்தை நள்ளிரவுரவு திருப்பலியை ஒப்புக்கொடுக்க அனுமதியளித்தார். மேலும் அவருடன் பணியாற்றிய துறவிகள் கிறிஸ்து பிறப்பைப் பற்றிக் கூறும் புதிய பாடல்களை கரோல் கீதங்கள் வடிவில் இசையமைத்து பாடினர். இவ்வாறாக திருஅவை புறவினத்தவர்களின் மத்தியிலிருந்த கரோல் கீதங்களை கிறிஸ்தவ இறையியல் பின்னணியில் சேர்த்துக்கொண்டது.

கரோல் என்பதன் பொருள் "மகிழ்வுடன் பாடுதல்" என்பதாகும். முதலில் இத்தகைய பாடல்கள் இலத்தின் மொழியிலே பாடப்பட்டன. அதன்பின் ஆங்கில மொழியிலும் அண்மைக்காலங்களில் மக்களின் தாய்மொழிகளிலும் இசையமைக்கப்பட்டு கத்தோலிக்கர்களாலும் கிறிஸ்தவர்களாலும் பாடப்பட்டு வருகின்ற. புகழ்பெற்ற கிறிஸ்மஸ் கரோல் கீதங்களாக 'Silent night' (1818). 'Hark the Herald Angels Sing' (1730) ஆகியவற்றை கூறலாம். விசேடமாக புனித பொனவெஞ்சர் (St. Bonaventure) இயற்றிய 'O Come All Ye Faithfull' (1744) எனும் பாடல் 120 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இவ்வாறு கிறிஸ்மஸ் என்றாலே கரோல் கீதம் ஒரு தனிச்சிறப்பை பெற்றுள்ளது.

**"வெற்றி பெறுவது எப்படி என்பதை விட தோல்வி அடைந்தது எப்படி என்று யோசித்து பார் இலகுவில் வெற்றி பெறுவாய்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே!*

# புதிய நியம முறைகள் வருக ...



நற்கருணை ஆசீர்வாதம் நடந்து கொண்டிருந்தது. பாடகற்குழாம் நற்கருணை ஆராதனைப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு விதத்தில் இறைவனின் உடனிருப்பை கூறிக் கொண்டிருந்தன. இறுதியாக மாண்புயர் பாடல் பாடினர். அந்தப் பாடலின் இரண்டாம் வரியைப் பாடும் போது அது என்ன என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. அந்த வரிகள் "பழைய நியம முறைகள் அனைத்தும் இனி மறைந்து முடிவு பெறுக... புதிய நியம முறைகள் வருக..."

ஏன் பழைய நியமங்கள் மறைய வேண்டும். புதிய நியமங்கள் ஏன் வரவேண்டும். என்ற கேள்வி எனக்குள் ஆழமாக எழவே. அன்று ஆராதனை முடிந்தவுடன் அருட்தந்தையை சந்தித்தேன் என் சந்தேகத்தை அவரிடம் கேட்டேன். அவரது பதில் என்னை இன்னும் ஆழமாக சிந்திக்க வைத்தது.

## இன்னுமா தயக்கம் – 25

பழைய ஏற்பாட்டு நியமங்கள், சட்டம் சார்ந்த நியமங்கள் ஒரு மனிதன் எப்படி நடக்க வேண்டும், எப்படி சாப்பிட வேண்டும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்று அனைத்திற்கும் நியமங்கள் எழுதி வைத்திருக்கின்றார்கள். அந்த நியமங்கள் தவறி எவராவது நடந்தால், அவர்கள் இறைவனுக்கு எதிராக பாவம் செய்கின்றார்கள்.

எனவே சட்டங்கள் மிக முக்கியமானவையாகும். இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு மக்கபேயர் 2ம் புத்தகத்தில் 6ம் அதிகாரத்தில் 18ம் இறைவார்த்தை முதல், எலயாசரின் மறைசாட்சி இறப்பை குறிக்கும் நிகழ்வு நடைபெறுகின்றது. அதில், தான் யூத மதத்தை தழுவியவன் என்பதற்காக பன்றி இறைச்சியை உண்ணமாட்டேன். அதனினும் நான் உயிரை விடத் துணிகின்றேன். என்று தன் சாட்சியத்தை இரத்தம் சிந்தி பறைசாற்றுகின்றார். இவரது மறைசாட்சியம், தனது மதத்தின் சட்டத்தை சற்றும் பிசகாமல் பின்பற்றுவதற்கானதாகும். சட்டத்தின் ஒரு புள்ளியோ, சிற்றெழுத்தோ கூட மாறிவிடக் கூடாது. அவற்றை மிகச் சரியாக பின்பற்றவேண்டும் என்பதில் அவர்கள் மிகவும் கண்ணும் கருத்துமாயிருந்தார்கள். அதற்காக தங்கள் உயிரையும் கொடுக்கத் துணிந்தார்கள்.

ஆனால், புதிய ஏற்பாட்டில், அதன் முதல் புத்தகமாகிய மத்தேயு நற்செய்தியில் ஆண்டவரின் பிறப்பையொட்டிய நிகழ்வுகள் கூறப்படுகின்றன. அதில், நீதிமானாகிய யோசேப்பு, நீதியுள்ள நிலையில் வாழ்வதற்காக தனது வாழ்வில் நியமங்களை மறந்த ஒரு பெண்ணை குற்றப்படுத்தாமல் மறைவாக விலக்கிவிட நினைத்துக் கொண்டிருக்கின்றார். அவரது எண்ணப்படி மரியாள் மாசடைந்த ஒரு பெண். காரணம் அவள் நியமங்களை வாழத் தவறிவிட்டாள். ஆனால் புனித யோசேப்புக்கு இறைவன் கொடுத்த கட்டளை. "அந்த நியமங்களை மறந்து விட்டு அவளை ஏற்றுக் கொள்!" என்பது தான். அது வரை நியமங்களின் எழுத்துக்களை மட்டும் பின்பற்றிக் கொண்டிருந்த மக்களுக்கு இறைவன் ஒரு புதிய நியமத்தைத் தருகின்றார்: "பிறர் குற்றவாளிகள் என்று தீர்ப்பிடுவதற்குப் பதிலாக அவர்களை அன்பு செய்யுங்கள், ஏற்றுக் கொள்ளுங்கள், அவர்களைப் புறந்தள்ளாதீர்கள்!" என்று.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பு நிகழ்ச்சியிலிருந்தே இந்த நியமத்தை நாம் காணலாம். அன்னை மரியா கன்னியாக இருந்து, அதாவது திருமண உறவு இல்லாமல் குழந்தையைப் பெற்றெடுக்கும் நிகழ்வே, அவரைப் பார்க்கும் அனைவருக்கும் ஒருவித தீர்ப்பிடுதல் மனநிலையை உருவாக்கும். ஆனால் அன்னை மரியாவை தீர்ப்பிடுதல் எவ்வளவு தவறானது என்பதை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இதுவே அந்த புதிய நியமமாகும்: நாம் சட்டங்களின் படி அல்ல, அன்பின் வழி நடக்க அழைக்கப்பட்டுள்ளோம். பிறரை குற்றவாளிகள் என்று தீர்ப்பிட அல்ல, மாறாக பிறரை நல்லவர்கள் என்று பாவித்து அவர்களோடு நல்லுறவு கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம். அருட்பணியாளர் இந்த விளக்கத்தைத் தந்தபின் நான் இன்னும் குழப்பமடைந்தேன். இது எப்படி சாத்தியமாகும். இன்றைய பல்வேறுவிதமான குழப்பங்கள், பிரச்சனைகள், துன்பங்களுக்கு இந்த தீர்ப்பிடுதல் தான் காரணம். ஆனால், பிறர் நல்லவர்களா? தீயவர்களா? என்று அறிந்து கொள்ளாமல் நாம் எப்படி வாழ முடியும்? அது சாத்தியமா?

**இந்த கேள்விக்கும் அருட்பணியாளர் பதில் தந்தார்:**

உரோமையர் 5:8ல், புனித பவுலடிகளார் இதற்கு ஒரு அழகான விளக்கம் தருகின்றார். நாம் அனைவரும் நல்லவர்களுக்காக தியாகங்கள் செய்ய துணிவோம். யாராவது தீயவர்கள் என்று தெரிந்திருந்தால் நாம் அவர்களுக்கு உதவி செய்யக் கூட துணிய மாட்டோம். ஆனால், இயேசு நாம் பாவிகளாக இருந்த போதே நமக்காக உயிரையும் கொடுக்கத் துணிந்தார். அதுவே நமக்குக் கொடுக்கப்படுகின்ற சிறந்த எடுத்துக் காட்டு. ஆண்டவர் இயேசு இந்த உலகில் தான் கற்றுக் கொடுத்தவாறு வாழ்வதற்கு தானே நல்ல எடுத்துக் காட்டாய் வாழ்ந்தார். பாவிகளை தீர்ப்பிடுவதற்கு அல்ல, மாறாக அவர்களையும் ஏற்றுக் கொண்டு வாழ்வதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாய் திகழ்ந்திருக்கின்றார் என்பதே தெளிவு.

அவர் தன் உயிரைக் கொடுப்பதற்காகவே பிறந்தார். ஆண்டவர் இயேசுவின் பிறப்பே ஒரு சிறந்த தியாகமாகும். அன்னை மரியா ஆண்டவர் இயேசுவின் வாழ்வு எத்தகையதாக இருக்கப் போகின்றது என்பதை தொடக்கத்திலிருந்தே அறிந்திருந்தார். அதனால் தான் கபிரியேல் தூதரின் வாழ்த்தை கேட்ட போது அவர் கலங்கினார். ஆனால் தந்தையாம் கடவுளின் பராமரிப்பில் நம்பிக்கை வைத்து அவர் தனக்குக் கொடுத்த பணியை சிரமேற்கொண்டு ஏற்றுக் கொள்கின்றார்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பு, ஆண்டவர் இயேசுவின் வாழ்வு, அன்னை மரியாவின் கீழ்ப்படிதல், புனித யோசேப்பின் நீதி தவறாமை போன்றவை நமக்கு பல சிறந்த பாடங்களைத் தருகின்றன. இவை அனைத்திலும் ஆண்டவர் நமக்கு முக்கியமாக கற்றுத் தருவது என்னவென்றால், கடவுள் நம்மைத் தீர்ப்பிடுவதில்லை. கடவுள் நாம் சட்ட திட்டங்களை சரியாகக் கடைப்பிடிக்கின்றோமா என்று பார்த்துக் கொண்டிருப்பதில்லை. மாறாக அவர் நம்மை அன்பு செய்கின்றார், அவர் நம் மீது இரக்கம் கொண்டிருக்கின்றார். எனவே நாம் தப்பிப் பிழைத்தவர்களாக இருக்கின்றோம். ஒருவேளை இறைவன் மிகுந்த நீதி நிறைந்தவராய், நம் பாவங்களுக்கு சரியான தண்டனையை உடனடியாக கொடுப்பவராக இருந்தால், இந்த உலகில் யாருமே உயிரோடே இருக்க முடியாது. ஆனால் இறைவன் தீர்ப்பிட்டு தண்டிக்கும் இறைவனல்ல, மாறாக இரக்கமே உருவானவர் என்பதே அவரது பிறப்பு, வாழ்வு, இறப்பின் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் உண்மை.

அன்பார்ந்தவர்களே, நாமும் இறைவனின் நன்மைத் தனத்தை வாழ அவர் நமக்குக் கொடுத்த புதிய கட்டளையை கடைப்பிடிக்க முயல்வோம். அந்த புதிய கட்டளை, "அன்பு செய்யுங்கள்" என்பது மட்டுமே இந்த "அன்பு செய்யுங்கள்!" என்ற கட்டளையில் அனைத்து விழுமியங்களும் அடங்கிவிடும். அன்பிருந்தால் நாம் பிறரைத் தீர்ப்பிட மாட்டோம். பிறரை ஒதுக்கி வைக்க மாட்டோம். ஏற்ற தாழ்வுகள் பார்க்க மாட்டோம். மாறாக ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து வாழ்வோம், பிறரோடு சகோதர நல்லுறவு கொண்டு வாழ்வோம்.

மனுக்குலத்திற்கு மீட்பு கொண்டு வந்த மீட்பர் பிறந்த இந்த மாதத்தில் நாம் அவர் நமக்காக விட்டுச் சென்ற மீட்பை அதாவது, அவர் கற்றுக் கொடுத்த விழுமியங்களை நம் வாழ்வில் கடைப்பிடிக்க முயல்வோம். இறைவன் நம்மை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறையாசீருடன்,
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா க.ச

# ஆறு கிளரேசிய அருட்சகோதரர்கள் திருத்தொண்டர்களாக அருட்பொழிவு



வவுனியா பம்பைமடு இறை இரக்க திருத்தலத்தில் 13.10.2022 காலை 10.30 மணியளவில் இலங்கை புனித யோசேவாஸ் பெயர்கொண்ட கிளரேசிய சபை அருட்சகோதரர்களான அருட்சகோதரர். டெஸ்மன் குரூஸ் CMF, அருட்சகோதரர். அன்ரனி டனோசன் CMF, அருட்சகோதரர். சுதர்சன்CMF, அருட்சகோதரர். டெஸ்மென்ராஜ் CMF, அருட்சகோதரர். ராஜசேகர் டயஸ் CMF, அருட்சகோதரர். சிலைக்சன் CMF ஆகியோர் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரி பேரருட் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களால் திருத்தொண்டர்களாக அருட்பொழிவு செய்யப்பட்டார்கள்.



இத் திருப்பலியில் பல மறைமாவட்டத்தில் இருந்து அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அருட்சகோதரர்கள் மற்றும் உறவினர்கள், இறைமக்கள் என அதிகமானோர் பங்குகொண்டு திருத்தொண்டர்களுக்காக மன்றாடி செபித்ததோடு இறை ஆசிகளையும், வாழ்த்துக்களையும் கூறி திருத்தொண்டர்கள் இறைபணியை இறை உணர்வோடு ஆற்றிட ஆசிகளையும் தெரிவித்தார்கள்.

**இம்மாத மேற்கோள்கள் ஹிட்லரின் சிந்தனைகளிலிருந்து!**

**"கோபத்தோடு உற்று நோக்கினேன் யார் என்னை தோற்கடித்தது...? என்று புரிந்து கொண்டேன் அந்த கோபம் தான் என்னை தோற்கடித்தது என்று"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் இறையியலும் பாலுணர்வியல் நடவடிக்கைகளும்

அருட்பணி ஜெ. கிறிஸ்டிப்போல்

## திருமணத்திற்கு முன்னரான பாலுறவும் கூடி வாழ்தலும்

திருமணத்தின் இயல்பையும் அதன் அருளடையாள தன்மையை ஆராய்ந்தோம். உடல் இறையியல் ஒளியில் இன்று உலகில் காணப்படும் தவறான உறவுகள், பாலியல் செயல்களை பற்றி ஆராய்வோம். திருமணம், பாலுறவு, காதல் ஆகிய மூன்றும் ஒரே நோக்கத்தை உடையனவாகும். ஆகவே இவை மூன்றையும் பிரிக்க முடியாது. வெறும் காதல் பலனளிக்காது அது திருமணத்தில் முடிய வேண்டும். வெறும் திருமணமும் பலனளிக்காது அது அன்பினால் கட்டப்பட்டு பிள்ளை செல்வங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். திருமணமும் அன்புமின்றி பாலுறவில் மட்டும் ஈடுபடுவது தவறாகும். அங்கே மனித ஆள்கள் சடப்பொருளாக பாவிக்கப்படுகின்றனர்.

பாலுறவு என்பது ஒரு உடலியல் சார்ந்த விடயம் மட்டுமல்ல மாறாக அது அன்பு மற்றும் ஆன்மீகம் சார்ந்த விடயமாகும். பாலுறவு என்பது ஒரு பொழுதுபோக்கு அம்சம் அல்ல மாறாக ஆண், பெண் உறவை உன்னத நிலைக்கு உயர்த்தும் ஒரு புனிதமான விடயமாகும். அது புனிதமானது என்பதால் திருமண உறவு என்னும் வேலியால் அது பாதுகாக்கப்படுகின்றது. பாலுறவு என்பது ஆண், பெண் உறவில் பதியப்பட்டிருக்கும் ஒரு முத்திரையாகும். எனவே திருமணம் புரியாமல் கூடி வாழ்தல் உடல் இறையியல் தத்துவங்களுக்கு எதிரானதாகும். கூடி வாழும் தம்பதியினரின் பெரும்பான்மையானோர் விவாகரத்தில் அந்த உறவை முறித்துக் கொள்கின்றனர்.

அண்மைய ஆராய்ச்சிகளின் அடிப்படையில் ஒரு பெண்ணானவள் தன் வாழ்வில் "உறவை ஏற்படுத்துகின்ற ஓமோன்களை" மூன்றுமுறை சுரக்கச் செய்கின்றாள். அதாவது பாலுறவின்போதும், குழந்தை ஒன்றை பெற்றெடுக்கும் போதும், அதன்பின் குழந்தைக்கு தாய்ப் பால் ஊட்டும் போதும் அது உறவு ஓமோன்களை சுரக்கச்செய்கின்றாள். ஆகவே பாலுறவானது திருமணம் என்னும் மீளப்பெற முடியாத அர்ப்பணிப்பினால் பாதுகாக்கப்பட வேண்டும். திருமணத்திற்குள்ளே தன் துணைவரோடு வைத்துக்கொள்ளும் உறவானது முதல் ஒன்றிப்பின் அனுபவத்தை தருகின்றது. கண்ணிமையும் கற்பும், பாலுறவானது பிழையாக பயன்படுத்தப்படும் ஆபத்தில் இருந்து தடுக்கின்றன. ஆகவே பாலுறவு என்பது வெறும் அன்பின் செயல் மட்டுமல்ல மாறாக உயிர்களை உற்பத்தி செய்யும் உன்னத செயல் என்பதை நினைவில் கொள்வோம்.



ஏதேன் தோட்ட மனிதர்கள்

## செயற்கை முறையிலான பிறப்பு கட்டுப்பாட்டு முறைகள்

பெருகி வரும் சனத்தொகைக்கு ஏற்ப பெற்றோர்கள் ஒரு பொறுப்புள்ள பெற்றோர்த்துவத்தை கடைப்பிடிப்பதன் அவசியம்பற்றி திருஅவையில் பேசப்படுகின்றது. உலகம் இச்சனத்தொகை கட்டுப்பாட்டுக்கு செயற்கை முறையிலான பல்வேறு திட்டமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. உதாரணமாக மாத்திரைகள், தடை கருவிகள், சத்திர சிகிச்சைகள் ஆகியவற்றை கூறலாம். திரு அவையானது பாலுறவுக்கு முன்போ, உறவின் போதோ, உறவின் பின்போ ஒரு புதிய உயிரை தோற்றுவிக்கும் செயலுக்கு தடையாய் இருப்பவற்றை தன்னிலே தீமையானது என்று கற்றுக்கொடுக்கின்றது. இந்த செயலை உடல் இறையியலின் போதனைகளின் படி நோக்குகையில் இது இறை சித்தத்திற்கு தவறானது என்று திருத்தந்தை ஜோன் பவுல் அவர்கள் கற்றுக்கொடுக்கின்றார். அதாவது இறைவன் தாம்பத்திய உறவின் வழியாக பெற்றோர்களின் அன்பின் செயலால் புதிய ஆன்மாக்களை படைக்கின்றார். ஒவ்வொரு உயிரும் தனித்தன்மை வாய்ந்தது. இத்தனித்தன்மை வாய்ந்த மனிதனை கணவன் மனைவி ஊடாக இறைவனே படைக்கின்றார். ஆகவே இந்த இறைச்செயலுக்கு மனிதன் தடையாய் இருக்க கூடாது.

மனிதனின் உடல் குறியீட்டு தன்மை உடையது. (Symbolic Meaning) அதாவது அது ஆன்மீக உலகத்தோடு நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. அது போலவே மனிதனின் உடல் உடலியல் காரியங்களிலும் ஈடுபடுகின்றது. உடலியலும் ஆன்மீகமும் இறையனிலிருந்தே ஊற்றெடுக்கின்றது. மனிதனால் கண்டுபிடிக்கப்படும் கருவிகள் படைப்பை விருத்தி செய்ய வேண்டுமேயொழிய அவை அவற்றை அழிக்க கூடாது. செயற்கை முறையிலான பிறப்பு கட்டுப்பாட்டு திட்டம் இந்த அழிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

மனித உடல் அன்புக்காகவே படைக்கப்பட்டுள்ளது. (Nuptial Meaning) பெண்ணானவள் படைக்கப்பட்டு ஆதாமிடம் அழைத்து வரப்பட்டபோது அவன் அவளை ஏற்றுக்கொண்டான். அதுப்போலவே, பெண்ணும் தன்னை ஆணுக்கு கையளித்தாள். இந்த பரஸ்பர செயலினால் அவர்கள் ஒருடலாக மாறினார்கள். ஆகவே ஏற்றுக் கொள்ளுதல், தற்கையளித்தல் என்கின்ற செயற்பாடுகளுக்கிடையில் எவ்வித தடையும் இருக்கவில்லை எனவே பாலுறவில் இணையும் தம்பதியினரிடையேயும் எவ்வித புறத்தடைகள் இருக்க முடியாது. செயற்கை கருத்தடை முறைகள் ஏற்றுக் கொள்ளுதல் தற்கையளிப்பு என்கின்ற சித்தாந்தத்திற்கு எதிராக செயல்படுகின்றது.

கடந்த பகுதிகளில் பாலுறவு என்பது ஓர் உடல் மொழியாகும் என்பதை கற்றிருக்கின்றோம். ஆகவே அந்த உடல் மொழியில் உண்மையும், நேர்மையும் இருக்க வேண்டும். செயற்கை பிறப்பு கட்டுப்பாடு பொய் நிறைந்த, நேர்மையற்ற உறவை தோற்றுவிக்கின்றது.

14

உடல் இறையியல் செயற்கை குடும்ப கட்டுப்பாட்டு முறைகளை அனுமதிக்காத அதேவேளை இயற்கை குடும்பநல திட்டங்களை ஊக்குவிக்கின்றது. பாலுறவு என்பது தன்னிலே நன்மையானதாக இருப்பதால் கணவன் மனைவி அதில் ஈடுபடுவதற்கு எந்தவிதமான மேலதிக தேவையோ காரணமோ இருக்க அவசியமில்லை. கணவன் மனைவியினர் தங்கள் குழந்தைகளின் எண்ணிக்கையினை தாங்களே தீர்மானித்துக்கொள்ளலாம். அத்தோடு குழந்தைகளுக்கு இடையிலான இடைவெளியை இயற்கை குடும்பநல திட்டத்திற்கு அமைய தீர்மானித்துக்கொள்ள திரு அவை அனுமதி வழங்கியுள்ளது.

உடல் இறையியல் கண்ணோட்டத்தில் இயற்கை குடும்ப நல திட்டங்களை பார்க்கும்போது அது முதல் ஒன்றிப்பு அனுபவத்தையுடைய தம்பதியினரை இட்டுச் செல்கின்றது. இயற்கை குடும்ப நல திட்டத்தில் கணவனும் மனைவியும் எந்த விதமான தடைகளும் இன்றி தற்கையளிப்பு மற்றும் ஏற்றுக் கொள்தல் ஆகிய திருமண உறவின் பண்புகளை சுதந்திரமாக கடைப்பிடிக்கின்றனர். உடலானது ஒன்றிப்புக்கே படைக்கப்பட்டுள்ளது என்பதனை இயற்கை குடும்ப கட்டுப்பாட்டு முறைகள் ஊக்குவிக்கும் அதேவேளை செயற்கை முறைகள் அதை மறுதலிக்கின்றன. இயற்கை குடும்ப கட்டுப்பாட்டு முறைகள் ஆணும் பெண்ணும் சுதந்திரமாக செயல்படவும், சுதந்திரமாக தொடர்பு கொள்ளவும், சுதந்திரத்தை தங்களது உறவில் அனுபவிக்கவும் வழிசமைக்கின்றன. இயற்கை குடும்ப கட்டுப்பாட்டு முறைகள் கணவனும் மனைவியும் பாலுறவு மற்றும் இனப்பெருக்க வளமை அகியவற்றை பற்றி நல்லதொரு அன்னியோன்ய தொடர்பாடலை தம்மிடையே ஏற்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கின்றன. தமது இனப்பெருக்க வளமை பற்றி கணவன் மனைவியரிடையே ஏற்படுகின்ற புரிந்துணர்வு அவர்களிடையே ஒரு நல்ல நெருக்கத்தை ஏற்படுத்துகின்றது. இயற்கை குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளை பயன்படுத்தும் தம்பதியினரிடையே விவாகரத்து குறைந்த மட்டத்தில் உள்ளதாக கணிக்கப்படுகின்றது.

ஆபாச திரைப்படங்கள், சுய இன்பம் ஓரினச்சேர்க்கை ஆகியன மனித உடலின் குறியீட்டு நோக்கம் மற்றும் பிறப்பு தன்மை கொண்ட நோக்கங்களுக்கு எதிரானவையாக இருக்கின்றன. இறைவன் மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்தான் அவர்கள் இனி இருவர் அல்ல ஒருடல் என்கின்ற இறைவனின் திட்டத்தை தற்பால் புணர்ச்சி பொய்யாக்குகின்றது. ஒருடல் கோட்பாட்டுக்கும் இவை எதிரானதாகையால் உடல் இறையியல் அந்த பாலியற் செயல்களை தவறானவை என்று எதிர்க்கின்றது.

"இழப்பதற்கு இனி எதுவும் இல்லை என்ற மனிதனுடன் மோதி வெல்வது என்பது கடினமான காரியம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுழுக்குத் தொட்டி

திருமுழுக்கின் வழியாக தொடங்கியுள்ள பயணம் இறைவார்த்தையால் உறுதிபெற்று, நற்கருணையால் ஊட்டம் பெற்று நிலைவாழ்வை நோக்கிச் செல்லும் நம் வாழ்வின் அடையாளமாகவே உள்ளது. இந்தத் திருப்பயண உணர்வைக் காட்டும் விதமாக அமைப்பு இருக்க வேண்டும். திருமுழுக்குத் தொட்டி திருப்பீட முற்றத்தில் அமைவது பொருத்தமற்றதாயிருக்கும். எனவே, கோவிலின் நுழைவாயிலருகே உட்புறத்தில் அமைக்கப்படவேண்டும். அதோடு, பீடம், வாசகமேடை, தலைமையேற்பவரின் இருக்கை, திருமுழுக்குத் தொட்டி ஆகிய நான்கும் ஒரே விதமான பொருளால் (கற்கள் அல்லது மரம்) ஒரு விதமான வடிவமைப்பில் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பை வெளிப்படுத்தும் விதமாய் அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

**வாழ்வு சார்ந்த வழிபாடு – 14**

திருமுழுக்குத் தொட்டி இருக்கும் இடத்தைச் சுற்றி அருளடையாளக் கொண்டாட்டத்திற்கு நம்பிக்கையாளர்கள் கூடி வரும் அளவுக்கு இடவசதி இருக்கவேண்டும். ஏனெனில் ஒரு கோவிலில் ஒருவர் திருமுழுக்குப் பெறுகிறார் எனில், அவர் உலகளாவிய திரு அவையில் உறுப்பினராகிறார். கிறிஸ்துவின் மறையுடலின் பகுதியாகிறார். அவரது வருகையை பங்கிலுள்ள அனைவரும் சேர்ந்து கொண்டாடுவதே சாலச் சிறந்தது. எனவே தான் பல பங்குகளில் சிறப்பாக பாஸ்காத் திருவிழிப்பிலோ அல்லது ஞாயிறு வழிபாட்டிலோ திருமுழுக்குப் பெறுவது ஊக்குவிக்கப்படுகிறது. ஒரு சில இடங்களில் திருமுழுக்குப் பெற்ற குழந்தையோ அல்லது பெரியவரோ ஞாயிறுத் திருப்பலியின் அறிவிப்புகளின் போது முன்கொணரப் பெற்று அறிமுகப்படுத்தப்படுகிறார்.

"திருமுழுக்கு, திருஅவையுடைய நம்பிக்கையின் அருளடையாளம் என்றும், நம்பிக்கையாளர்களோடு இணைக்கும் அருளடையாளம் (Sacrament of Unity) என்றும் தோன்றும்படி, வழக்கமாக அது பங்குக் கோவில்களிலும் திருமுழுக்குத் தொட்டி இருக்க வேண்டும்" (குழந்தைகளுக்கான திருமுழுக்குச் சடங்குமுறை, முன்னுரை, எண் 10) உண்மையில் எல்லாப் பங்குக் கோவில்களிலும் திருமுழுக்குத் தொட்டி இருக்கின்றதா? அப்படி இருந்தால், சரியாக பராமரிக்கப்படுகின்றதா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

ஒரு சில இடங்களில் நடைமுறைக்காக எளிமைப்படுத்தும் பெயரில் திருமுழுக்குத் தொட்டி இருந்தாலும் கூட அதனைப் பயன்படுத்தாமல் இருப்பது வருத்தமளிக்கிறது. திருப்பீட முற்றத்தில் வைத்து அனைத்து சடங்குகளையும் ஒரு சேர நிகழ்த்திவிட்டு, எவர்சில்வர் பாத்திரத்தில் திருமுழுக்குக் கொடுப்பது என்பது திருமுழுக்குத் தொட்டியிலிருந்து நம்பிக்கையாளர் பீடத்தை நோக்கிப் பயணிப்பதையும், "நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே திருமுழுக்கு ஒன்றே" (எபேசி 4:5) என்ற படிப்பினையையும் அர்த்தமிழக்கச் செய்கிறது. பெரியவர், சிறியவர், குழந்தைகள் என அனைவரும் எந்தவிதப் பாகுபாடுமின்றி ஒரே இடத்தில் திருமுழுக்குப் பெறுகின்றோம். எனவே அனைவரும் சரிசமமானவர்கள்.

புனித பவுல் கூறுவது போல, "கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (கலா 3:27 - 28) ஒரே நம்பிக்கையையும், ஒரே திருமுழுக்கையும், ஒன்றாய் இருப்பதையும் குறித்துக் காட்டவே பாகுபாடின்றி, ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் ஒரே திருமுழுக்குத் தொட்டியில் கழுவப்படுகின்றோம். எனவே, இதன் இறையியல் புரிதல் இத்திருச்சடங்கை நாம் அர்த்தமுள்ளவிதத்தில் கொண்டாட, நமக்கு உதவுவதோடு, திருமுழுக்குத் தொட்டியை பாவத்திற்காக நாம் இறந்த கல்லறையாகவும், புதுவாழ்வைப் பிறப்பித்த கருவறையாகவும் கண்டுணர வைக்கும் என்பதில் ஐயமில்லை.

திருமுழுக்குத் தொட்டி (Baptismal Font) என்பது புனித நீர்க்கலன் (Holy Water Stoup) களிலிருந்து வேறுபட்டது. என்பதை தொடக்கத்திலேயே தெளிவுபடுத்தியிருந்தேன், கோவிலின் வாசலில் வைக்கப்படுகிற புனித நீர்க்கலன்கள் கோவிலுக்குள் நுழையும் போது நம்பிக்கையாளர் தன்னை புனிதப்படுத்திக் கொள்ள வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பழக்கம் தொடக்கத்தில் இறைவேண்டலுக்காக கிறிஸ்தவர்கள் கூடிவந்த போது தங்கள் கைகளைக் கழுவி தூய்மைப்படுத்திக் கொண்ட தன் (காண் 1திமொ 2:8) நீட்சியாக இருக்கிறது. பழங்காலக் கிறிஸ்தவக் கோவில்களின் அருகில் இருந்த ஊற்றுகளில் கைகளைக் கழுவித் தூய்மைப்படுத்திய பின் இறைவேண்டலுக்காகக் கூடினர்.

நாளடைவில் பிற இடங்களில் கோவில்கள் கட்டப்பட்ட போது நீர்க்கலன்கள் கோவில் முற்றங்களில் வைக்கப்பட்டன. புனித ஜான் கிறிஸோஸ்தம் இதைப் பற்றிக் கூறுகையில், "கைகளை மட்டும் கழுவி விட்டு கோவிலுக்குள் நுழையாதீர்கள், உங்கள் இதயங்களையும் கழுவுங்கள்" என்கிறார். (புனித ஜான் கிறிஸோஸ்தமின் 71வது மறையுரையிலிருந்து) இந்த நடைமுறைப் பழக்கம் நாளடைவில் சமய அர்த்தம் பெறுகிறது. பின்னர் கழுவித் தூய்மைப்படுத்தும் தேவை குறைந்தும் பக்திப் பழக்கமாகத் தொடர்கிறது. நம் திருமுழுக்கையும் கோவிலுக்குள் நுழையும் போது நம்மையே புனிதப்படுத்துவதன் அவசியத்தையும் குறித்து புனித நீர்க் கலன்கள் கோவிலின் வாசல்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. நம்மீது புனித நீரால் சிலுவை அடையாளம் வரைந்து ஆசியளிப்பது இன்றைய வழக்கமாய் இருக்கிறது. எனவே உள்ளார்ந்த அர்த்தம் அறிந்து கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வுப் பயணத்தை பொருளுள்ளதாக்குவோம்.

தொடரும் ....

அருட்பணி . ம. அலெக்சாண்டர்

## கிறிஸ்மஸ் குடில்

கிறிஸ்மஸ் குடில்கள் அமைக்கும் பழக்கம் 700 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. உலகில் முதன்முதலாக கிறிஸ்மஸ் குடில் அமைத்தவர் புனித பிரான்சிஸ் அசிசி இவர் 1223ம் ஆண்டு குடில் வைக்கும் வழக்கத்தை தொடங்கி வைத்தார். இத்தாலியில் கிரேசியா கிராமத்தைச் சேர்ந்த ஜியோனி என்பவர் மூலம் புனித பிரான்சிஸ் அசிசி இயேசு பாலன் போல வேடமிட்ட குழந்தைகளைக் கொண்டும், ஆடுமாடுகளைக் கொண்டும் உயிருள்ள குடிலை அமைத்தார். இதற்குத் திருத்தந்தை மூன்றாம் ஹெனோயர் அனுமதி அளித்தார். இதன் பிறகே குடில் பொம்மைகள் வைத்துக் குடில் அமைக்கும் பழக்கம் உலகில் வந்தது. உலகிலேயே முதன் முதலாக பொம்மை கிறிஸ்மஸ் குடில் ரோம் நகரில் சந்தா மேகியார் என்னும் தேவாலயத்தில் அமைக்கப்பட்டது.



## ௨௦ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1985 | 2022 |
| 06 | 10 |
| 22 | 11 |

**ஆரோக்கிய நாதன் கிறிஸ்டி மயூரன்**

உதிராத மலர் இல்லை
உலராத பனி இல்லை
புதிரான வாழ்க்கை இதில்
புதையாத பொருள் இல்லை
எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
என்பது யாருக்கும் தெரியாது இருந்தும்
இம் மண்ணை விட்டு நீங்கள் பிரிந்து
சென்றாலும் எம் நெஞ்சங்களிலே
இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்



தகவல்: குடும்பத்தினர்
இல. 244, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

**"மற்றவர்கள் பின்னால் இருந்து உன்னை விமர்சித்தால் நினைத்துக் கொள்... நீ அவர்களுக்கு முன்னால் இருக்கின்றாய் என்று."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலகனாய் பிறந்த பாலஸ்தீனப் பாலகன் பாமரர்க்காய் பிறந்தவரா?

டிசம்பர் மாதத்திற்கு ஒரு தனிச்சிறப்பும் பெருமையும் உண்டு. ஆண்டின் இறுதி மாதம், இனிய மார்கழிக் குளிர் மாதம் என்பது மட்டுமல்ல, வரலாற்றை இரண்டாகப் பிரித்து புதிய வரலாறு படைக்கும் மீட்பின் நாயகர், உலக சரித்திரத்தை திரும்பிப் போட்ட உத்தமர் இயேசு பிறந்த மாதம் என்பது இந்த மாதத்திற்கு இன்னும் அதிக பெருமை தருவதாகும். ஆண்டாண்டு தோறும் இதை நினைத்து கொண்டாடும் இனிய விழாக்களுக்கும் அதிகமான ஆடம்பரங்கள், அலங்காரம், தோரணம், கொடிகள், பனி பொழியும் பசுமை வெள்ளை நிறக் காட்சிகள் அனைத்திற்கும் பஞ்சமே இல்லை. மகிழ்விற்கும் இன்பத்திற்கும் பெயர் போன புனித, புதுமை பொலிவு மாதம் டிசம்பர் என்பது மிகையாகாது.

டிசம்பர் மாதக் குளிரில் மலர்ந்த பாலஸ்தீனப் பாலகன் பிறப்பிலும் ஒரு தனி வரலாறு புதைந்துள்ளது. நாம் எண்ணிப் பார்க்க முடியாத அளவு உயரத்திற்கு அது ஏழை, நலிந்த மக்களை உயர்வுக்கு கொண்டுச் செல்கிறது. இயேசுவின் பிறப்பின் ஆரம்ப இடம் சாதாரண எளிய மக்கள் வாழும் பகுதி, சிறிய மாட்டுத் தொழுவம், ஆடு மாடுகளின் கூடாரம், ஐந்தறிவு ஜீவன்கள் அலை மோதும் அணிவகுப்புப் பகுதி, ஆடுகளைக் காவல் காக்க நகரிலிருந்து தூரத்தில் தெரிவு செய்த இடம், நாகரீகம் எட்டிப் பார்க்காத எளிய மானிடரின் இருப்பிடம், கண் விழித்து காத்துக் கிடக்கும் காவலர் கூட்டமாக வாழும் பகுதி, இப்படி எளியவர் வாழும் ஒரு பகுதியைத்தான் பார்போற்றும் பாலகன் தன் மனித அவதாரத்திற்காய் அவதரிக்கிறார்.

பாலன் பிறந்த பாலஸ்தீன நாடும் புவி கோளத்தின் பரப்பில், புறம்பே தள்ளப்பட்ட ஒரு பாலை நிலப் பகுதியாகும். வறண்டது, வளமற்றது, சிறியது, உரோமையர், கிரேக்கர் எல்லோரும் பாதம் பதித்து விடுதலை தராது அடிமைப்படுத்தியது, தாழ்ந்த நிலம், விளிம்புப் பகுதி என்றெல்லாம் சொல்லலாம். அதுவே காலம் கடந்து கிறிஸ்து இயேசு தேர்ந்தெடுத்த உன்னத பிறப்பிடமாகிறது.

பாலன் இயேசு முதலில் பார்த்தவர்களும் எளியவர்களே, இடையர் கூட்டம், மந்தையின் காவலர்கள், ஆடு மாடுகளைப் பராமரிப்பவர்கள், நகர விளிம்பிற்கு வெளியே நடமாடியவர்கள், மாசில்லா மனதுடன் அப்பழுக்கில்லா அழகான இயற்கையுடனும் அனுதினமும் அமைதியை அனுபவித்து ஆடிப்பாடிய ஆயர்கள், இந்த எளிய மனிதர்களே இயேசு பிறந்ததை, வானதூதர்களின் வாழ்த்துப்பாடலை, வழிகாட்டி வழிநடத்தும் விண்மீன்களை, கீழ்திசை அரசர்களை எல்லாவற்றிற்கும் மேலாக காலம் காலமாய் காத்து கிடந்த இஸ்ரயேலின் மீட்பரை முதலில் பார்த்து பரவசமடையும் பாக்கியத்தைப் பெற்று மகிழ்கிறார்கள்.

இயேசுவின் பிறப்பு நலிந்தவர், எளியவர்க்கு முன்னுரிமை, முதன்மை இடம் கொடுக்கிறது என்பது இங்கு தெரிகிறது. ஊருக்கு வெளியே, ஊர் காவல் செய்யும் அன்னியர்கள் மத்தியில், தூங்காமல் காவல் காத்துக் கிடக்கும் கூட்டத்தின் இடையில், ஏழை இடையர்களின் நடுவே உன்னதரின் பிறப்பு உருப்பெறுகிறது என்பது ஏழையர், நலிந்தவர் பாமரர் மீது அவர் கொண்ட ஒருவித தனிப்பட்ட அன்பு, கவனம், கரிசனையைக் காட்டுகிறதன்றோ?

சொகுசு வாழ்வு உல்லாசம் எதுவும் சொந்தமாகக் கொள்ளாதவர்கள், வரலாற்று ஏடுகள் அதிகம் பேசாதவர்கள், அகில உலகம் நினைத்துப் பார்க்காதவர்கள், மௌனக் கூட்டமாய் மறைந்து வாழ்ந்தவர்கள், நகரின் ஓரத்தில் ஒதுங்கி நின்றவர்கள் யாருமே தேடாத எளிய மக்கள், பார் போற்றும் பெருமகனின் மனித உருபெறும் நிகழ்வை நேரில் கண்டு மகிழ்ந்ததுடன் 2000 ஆண்டு கால உலக வரலாற்றிலும் நிரந்தர இடம் பிடித்து உயர்ந்து நிற்கிறார்கள் என்பது பாலஸ்தீனப் பாலகனின் பிறப்பு பாமரர்க்கு ஒரு தனிப் பெரும் பெருமை, புகழ் சேர்ப்பது, உயரத்திற்கு கொண்டு செல்வது என்பதை ஐயம் இன்றி இன்னும் ஒரு முறை உறுதி செய்கிறது.

பாமரரை முதலில் தேடிய பாலகன் இயேசு தந்த ஒரு நல்ல செய்தியும் உண்டு. "உலகில் ஆண்டவருக்கு உகந்தவர்க்கு அமைதி உண்டாகுக" என்பதே அந்த செய்தி (லூக் 2:14) "உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி ஆகுக" என்பது பழைய விவிலிய மொழி பெயர்ப்பு.

அமைதி என்பதற்கு கிரேக்க விவிலியம் பயன்படுத்தும் சொல்லாடல் (cirenr) என்பதாகும். இது ஒரு வாழ்த்துச் செய்தி! பல அர்த்தங்களைக் கொண்டது. அமைதி, ஒற்றுமை, சமாதானம், பாதுகாப்பு, வளர்ச்சி, உடல் நலம், ஒப்புரவு, கடவுளுடனும் மனிதருடனும் ஒப்புரவு என்று பலவாறு இதற்கு அர்த்தம் கொடுக்கலாம். புதிய ஏற்பாட்டைப் புரட்டும் போது இதன் ஆழ்ந்த அர்த்தங்கள் இன்னும் தெளிவாகிறது. நாட்டின் அமைதி, ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பு, உலக அமைதி, துன்பங்களிலிருந்து விடுதலை, ஆபத்து அகன்ற அமைதி, வீட்டில் அமைதி, நோயிலிருந்து சுகம், உள்ளத்தில் அமைதி சாவிலிருந்து விடுதலை, விண்ணிலும் மண்ணிலும் அமைதி கடவுள் கொடையாகத் தரும் அமைதி என்று பல விதமான பாதுகாப்பை, உடல், உள நலனை, மகிழ்வை, சுகத்தை முழுமையான வாழ்வை விடுதலையை ஏழையருக்கு அறிவிப்பதாகிறது இந்த வாழ்த்து.



அச்சுறுத்தல்கள், ஆபத்துக்கள், பாதுகாப்பின்மை, அவமதிப்பு என பல விதங்களில் இன்று பாமரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வேதங்களைக் கொண்டே வெறியாட்டங்களின் விளைநிலமாகி பாதிப்புக்குள்ளாகிறார்கள் அப்பாவிகள். மத, இன, மொழி, ஜாதி என்று தரமற்ற உணர்வுகளைத் தீண்டி விட்டு நாட்டை கலவரப் பகுதியாக்கி சாதாரண மக்களைப் பலி கொடுக்கிறது இன்றைய அநீத சூழல், இப்படி கீழ்த்தர உணர்வுகளால், பிளவுகளால், பேதங்களால் பாதிக்கப்படுவதும் பலியாவதும் பெரும்பாலும் பாமர மக்களே ஆவர்.

எளியவரை முதல் முதலாகத் தேடி வந்து அவர்கள் வாழும் பாலஸ்தீனப் பகுதியில் பிறந்த இயேசு, அங்கு வாழும் நன்மனத்தோருக்கு அமைதியை, முழுமை வாழ்வை முதன் முதலில் அறிவித்தார். பார்போற்றும் பாலகனின் பிறப்பில் பாலஸ்தீனப் பாமரர் முதலிடமும் முக்கிய சிறப்பும் பெறுவது நம் சிந்தனையைத் தூண்டுகிறது. அன்றுபோல இன்றும் எளியவர், நலிந்தவர் வாழ்வில் வேரோட்டமான மாற்றம், முன்னேற்றம், முழு மனித வாழ்வு வரும் என்பதை மீண்டும் ஒருமுறை உறுதியுடன் அறிவிக்கிறது. இயேசுவின் பிறப்பு, பெருவாரியான ஏழைகள் நாளொரு மேனியாக நலிந்து வாழும் இன்றைய சூழலில் ஏழைகளுக்கு முழுமையான வாழ்வை, நிறை வாழ்வை, நிலை வாழ்வை மீண்டும் உறுதிபட அறிவிப்பதாகிறது 2022ம் ஆண்டின் கிறிஸ்து பிறப்பு விழா, அமைதியின் விழுதுகள் ஏழையர் வாழ்வில் வேர்களாகி மாற்றத்தை நிச்சயம் உருவாக்கும் என்பதை வரவிருக்கும் பாலனின் பிறப்பு அறிவித்து நிற்கிறது.

---

7 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்து ஜேர்மனிக்குச் சென்ற ஒரு கிறிஸ்தவத் துறவி இந்தப் பழக்கத்தை ஏற்படுத்தினார். ஃபர் மரம் தந்தை மகன் மற்றும் தூய ஆவி ஆகிய மூன்றையும். மூன்று வடிவங்களாகக் குறிப்பிடுவதாகக் கூறி மக்களை வணங்கச் செய்தார். ஜேர்மனிய மக்கள் ஒக் மரத்தை வணங்கி வந்தனர்.



12 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்மஸ் மரம் தலைக் கீழாக வீட்டின் உள்ள கூரையில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. 16 ஆம் நூற்றாண்டில் மார்டின் லூத்தர் தன் வீட்டில் மெழுகுவர்த்தி ஏற்றி மரத்தை அலங்கரித்தார். அதன் பின் ஜேர்மனியில் கிறிஸ்மஸ் சந்தைகளும் பரிசுப் பொருட்களும் விற்கப்பட்டன. இவை மரத்தில் தொங்க விட்டு அழகுப்படுத்தினர். முதல் முதலில் கிறிஸ்மஸ் மரம் அலங்கரிக்கப்பட்டு 1531ல் புகைப்படம் அச்சுக்கு வந்தது.

கிறிஸ்மஸ் மரம் அலங்கரிக்கும் நாகரீகம் அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கும் விரைவாக பரவியது. ஃபர், பைன் போன்ற ஊசி இலை மரங்களை அலங்கரித்து வீட்டின் ஒரு மூலையில் வைக்கும் வழக்கம் 17 ஆம் நூற்றாண்டிலும், வண்ண மின்விளக்குகள் கொண்டு அலங்கரிக்கும் வழக்கம் 19 ஆம் நூற்றாண்டிலும் ஏற்பட்டது.

19 ஆம் நூற்றாண்டு வரை காடுகளிலிருந்து வெட்டி அலங்கரிக்கப்பட்ட முறை பின்னர் மாறியது. அமெரிக்கா போன்ற இடங்களில் இதற்கென்றே பண்ணை அமைக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. தற்போது செயற்கை மரங்கள் வைத்து அலங்காரம் செய்யும் வழக்கம் உள்ளது.

## கிறிஸ்மஸ் மரம்

**"வெற்றி என்பது புத்திசாலிகளுக்கு சொந்தமானது அல்ல... அது முன்னேற துடிக்கும் உழைப்பாளிக்கும், தன்னம்பிக்கை கொண்டவர்களுக்குமே சொந்தம்"**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்ட பணி இடமாற்றங்கள் - 2023

| பெயர் | பங்கு | ஆணைக்குழு | அப்போஸ்தலிக்க சபை | ஏனையவை |
|---|---|---|---|---|
| அருட்பணி. அன்ரூ ஸ்டீபன் | இலிங்கநகர் | சமூகத்தொடர்புகள் | அருங்கொடை பணி | - |
| அருட்பணி. டக்ளஸ் ஜேம்ஸ் | அலஸ்தோட்டம் | பொதுநிலையினர் | - | - |
| அருட்பணி. டன்ஸ்டன் ப்ரெட்றிக் | பேராலயம் | - | புனித வின்சன் டி பவுல் | சட்டம் (நீதி) |
| அருட்பணி. ஜோஜ் திசாநாயக்க | கந்தளாய் | - | - | - |
| அருட்பணி. சுதர்ஷன் | செல்வநாயகபுரம் | - | பீடப்பணியாளர் | - |
| அருட்பணி. ஜோன்பிள்ளை | - | - | - | மேய்ப்புப்பணி நிலையம் |
| அருட்பணி. ஜொனத்தன் | குவாடலூப்பே | - | மரியாயின் சேனை | திருகோணமலை மறைக்கோட்ட முதல்வர் |
| அருட்பணி. யூட் ஜோன்சன் | - | - | - | தேசிய குருமடம் |
| அருட்பணி. யூட் சர்வானந்தன் | - | - | - | வெளிநாடு |
| அருட்பணி. கிங்ஸ்லி றொயட் | பாலையூற்று | திருவழிபாடு | - | - |
| அருட்பணி. மதுராங்கன் குரூஸ் | கன்னியா | - | - | - |
| அருட்பணி. நவரெட்னம் | - | குடும்ப அப்போஸ்தலிக்கம் | - | கிழக்கு பல்கலைக்கழகம் |
| அருட்பணி. போல்றொபின்சன் | தம்பலகமம் | எகெட், பல்சமய | - | குருமுதல்வர், நிதிப்பொறுப்பாளர் |
| அருட்பணி. ரஜீவா இருதயராஜ் | உவர்மலை | க. இளைஞர் ஒன்றியம் | - | பாடசாலை |
| அருட்பணி.றொகாண் பேனாட் | சாம்பல்தீவு | மறைக்கல்வி, விவிலியம் | - | நிலாவெளி மறைக்கோட்ட முதல்வர் |
| அருட்பணி. றொய்சன் ஸ்பாக் | - | திருப்பாலத்துவ சபை | - | சிறிய குருமடம், பாடசாலை |
| அருட்பணி. சுகுனேந்திரன் குரூஸ் | அன்புவழிபுரம் | - | - | - |
| அருட்பணி. ம. செபஸ்ரியன் O.M.I | இருதயபுரம் | - | - | - |
| அருட்பணி. வி. அல்பிரட் O.M.I | - | - | - | பாடசாலை |
| அருட்பணி. அன்ரன் O.M.I | குச்சவெளி (உதவி) | - | - | - |
| அருட்பணி. நி. முத்துத்தம்பி O.M.I | குச்சவெளி | - | - | - |
| அருட்பணி. அகஸ்ரின் கொ. O.M.I | - | - | - | பாடசாலை |
| அருட்பணி. வ. மொரிஸ் O.M.I | - | புலம்பெயர்வோர் | - | - |
| அருட்பணி. வெஸ்லி போல் | - | - | திருமுழுக்கு | - |
| அருட்பணி. அலன் வ. I.V.Dei | நிலாவெளி | - | - | - |
| அருட்பணி. எமில் லூசியன் S.J | ஆண்டான்குளம் | கிறிஸ்தவ வாழ்வு சமூகம் | - | - |
| அருட்பணி. தேவசீலன் C.M.F | சீனக்குடா | - | - | - |
| அருட்பணி. அ.ம. செல்லையா O.F.M | மூதூர் | - | - | மூதூர் மறைக்கோட்ட முதல்வர் |

## கற்று கற்றுக் கொடு...

"ஓர் ஆசிரியர் ஆயிரம் துறவிகளுக்கு சமம்" என்பர் கற்றுக் கொடுப்பவர்கள் அனைவரும் ஆசிரியர்களே. ஒவ்வொரு மனிதனும் பிறப்பில் இருந்து இறப்பு வரை ஏதோ ஒன்றைக் கற்றுக்கொண்டிருப்பதுடன் சக மனிதனுக்கும் கற்றுக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றான். இவை பலர் வழியாக கற்றவை ஆனாலும் கடந்து வந்த பாதைகளில் பலவகையான சந்தர்ப்பங்கள் மௌன மொழிகளிலும், இசை வழியாகவும், வார்த்தை வழியாகவும், கண்ணீர் வழியாகவும், சவால்கள் வழியாகவும் கற்றுக்கொண்டது. இன்னும் கற்றுகொள்ள இனி வரும் காலங்களில் பயணிப்போம்.



இன்று எங்கள் வீட்டு சிறார்களுக்கு நல்லவற்றை கற்றுக் கொள்ளுங்கள் என்றால், அவர்களின் எண்ணம் பாடசாலை ஆசிரியர் மட்டும் தான் கற்றுத்தருபவர் அவர்களிடமிருந்தே நல்லவற்றை பெற்றுக்கொள்ள முடியும் என்ற கருத்து உள்ளது. ஏன் வளர்ந்தோரின் சிலரின் கருத்தும் இதுவாகவே உள்ளது. உதாரணமாக ஏன் இதை ஆசிரியர் பாடசாலையில் சொல்லிக் கொடுக்கவில்லையா? என்று முந்திரிக்கொட்டைபோல் கேள்விகளை வீசுகின்றோம். அங்கே நானும் ஒரு ஆசிரியர் என்பதை ஒவ்வொரு மனிதன் உற்பட நானும் மறக்கின்றேன். காரணம் அறியாமை என்பதா? அல்லது மற்றவரை சுட்டிக்காட்டும் குற்றச்சாட்டு என்பதா?

எனவே இவ்வுலகில் வாழ அழைக்கப்பட்டவர்கள் அனைவருமே கற்றுக் கொடுப்பவர்களும் கற்றுக்கொள்பவர்களுமே ஆம் இதில் நாம் எந்த ரகத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பாடசாலை ஆசிரியர்கள் மட்டு கற்றுக் கொடுப்பதும் நல்வழி காட்டுவதும் அல்ல மாறாக உயிருள்ள அனைத்திற்கும் கற்றுக்கொடுக்கும் திறன் உள்ளது என்பதை உணர வேண்டும். கற்பித்தலில் பல வகை உள்ளன அன்பின் வழியாக கற்பித்தல், அடாவடித்தனமாக கற்பித்தல், பணிவாக கற்பித்தல் என்பன. ஆரம்பத்தில் கற்பித்தல் கசப்பானவையாகவும், கஷ்டமானவையாகவும் காணப்பட்டது. கற்றுக்கொள்வதும் அவ்வாறே தான் அதை சகித்துக்கொண்டு முன்வரும் போது அதன் வெற்றி உலகிற்கும், எமக்கும், சமூகத்திற்கும் இருக்கும் மகிழ்ச்சி நிலையானது. பிறர் வாழ்விற்கு படிப்பினையாகிறது. இதுவே கற்பித்தலும் கற்றவையும் ஆகும்.

P. சுபா

## கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்மஸ் தாத்தா சாண்டாகிளாஸ் என்று அழைக்கப்படும் புனித நிக்கோலாஸ் துருக்கி நாட்டில் பாதரா என்ற ஊரில் கி.பி 352ம் ஆண்டில் பிறந்தார். இவர் ஒரு ஆயர். கிறிஸ்மஸ் தினத்தன்று குழந்தைகளுக்கு அவர்கள் நினைக்காத பரிசுப்பொருட்களைக் கொடுத்து இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்துவார். அது முதல் கிறிஸ்மஸ் தாத்தா வேடமிட்டு குழந்தைகளை மகிழ்விக்கும் பழக்கம் உண்டானது. புனித நிக்கோலாஸ் இறந்த நாளான டிசம்பர் 6ம் திகதி கிறிஸ்மஸ் தாத்தா தினம் என்றழைக்கப்படுகிறது.



"நீ நடந்து போக பாதை இல்லை என்று கவலை கொள்ளாதே...
நீ நடந்தால் அதுவே ஒரு பாதை தான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரி ஹிட்லர்

## வரலாற்றை ஆக்கியோர் - 06



இரண்டாம் உலகப் போரின் கதாநாயகன் என அழைக்கப்படும் ஹிட்லர் வட அஸ்திரியாவில் 1889 ஏப்ரல் 20ம் திகதி பிறந்தார். தந்தையின் கண்டிப்பில் வளர்ந்த இவர் தாயின் மீது அதிக பாசம் கொண்டிருந்தார். வகுப்பில் முதல் மாணவனாகக் காணப்பட்ட போதும் தான் ஓர் ஓவியனாக வர வேண்டும் என்பதையே தன் விருப்பமாகக் கொண்டிருந்த இவர் சிறுவயதில் இருந்தே நாவல்கள், போர்கள் பற்றிய கதைகள் என்றால் அதிக ஆர்வம் உள்ளவராக் காணப்பட்டார். அவமானங்களும் தோல்விகளுமே மிகப்பெரிய சாதனையாளர் களின் இளமைக்காலத்தை நிரப்புகிறது. அந்த வரிசையில் தாய் தந்தையின் இறப்பிற்குப் பின் நாடோடியாகத் திரிந்த ஹிட்லர் தெருவோர டீ கடைகளில் நாளிதழ்களை படிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொண்டார். அப்போதிலிருந்தே அவருக்கு அரசியலில் ஆர்வம் துளிர்விடத் தொடங்கியது. பிழைக்க வழிதேடி ஜெர்மனிக்கு வந்தவர் பின் அங்குள்ள இராணுவத்தில் சேர்ந்து கொண்டார். 1914 - 1918 வரை நடந்த முதலாம் உலகப் போரின் போது ஹிட்லர் இராணுவத்தில் சோல்ஜராக பணியாற்றினார்.

"தேசிய சோசியலிஸ்ட் ஜெர்மன் தொழிலாளர்கட்சி"யில் உறுப்பினராக சேர்ந்தார். 1920ல் அக்கட்சியின் முதல் பொதுக் கூட்டம் நடைபெற்ற போது ஹிட்லர் தனது முதல் உரையை ஆற்றினார். அன்று அந்த பெருங் கூட்டத்தை முழுமையாக ஆக்கிரமித்த இளம் தலைவராக காணப்பட்டார். 1928ல் நடந்த தேர்தலில் ஹிட்லரின் கட்சி தோல்வியடைந்தது ஹிண்டன் பெர்க் ஜனாதிபதியாக பதவியேற்றார். 1933ல் ஹிட்லர் பிரதமராக நியமிக்கப்பட்டார் பிரதமராக பதவியேற்று ஒரு வருடத்தில் ஜனாதிபதி இறக்கவே அவர் ஜனாதிபதியாக பதவியேற்று ஜெர்மனியின் சர்வாதிகாரியாக ஆனார். "இனி ஜெர்மனியில் ஜனநாயம் என்ற பேச்சிற்கே இடமில்லை" என அறிவித்தார். யூதர்களை கைதுசெய்து விஷப்புகையால் கொலை செய்தான். தினமும் 6000 - 10000 வரை யூதர்கள் கொல்லப்பட்டனர். ஹிட்லரின் ஆட்சிக்காலத்தில் 50 லட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர்.

### மறைக்கப்பட்ட ஹிட்லரின் பக்கங்கள்

ஹிட்லரின் தவறுகளால் அவரை பற்றிய நினைவுகள் உலக சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட போது அவரின் சாதனைகளும் கூடவே மறைக்கப்பட்டன. முதல் உலகப்போரில் வீழ்ச்சியுற்ற ஜெர்மனியின் பொருளாதாரத்தை தூக்கி நிலைநிறுத்தியவர். இவர் பதவியேற்று மூன்றே ஆண்டுகளில் ஜெர்மனியில் வேலை இல்லாதவர்களே இல்லை. உழைப்பிற்கேற்ற ஊதியம், போனஸ், விலைவாசி கட்டுப்பாடு, இலவச வைத்தியசாலை, முதியோர் பென்ஷன் மற்றும் சர்வதிகாரிகளின் ஆட்சிக்காலத்தில் ஆபாச அத்துமீறல்கள் அதிகமாகவே இருக்கும். ஆனால் ஹிட்லர் அத்தகைய ஆபாசங்களை ஒருபோதும் அனுமதிக்கவில்லை. ஒரு விபச்சாரவிடுதி கூட அவரின் ஆட்சிக்காலத்தில் இல்லை என்பதே மிகப்பெரிய சாதனை. இவ்வாறு அவரது 12 கால ஆட்சிக்காலத்தில் முதல் ஐந்தாண்டு காலம் மகத்தானவை.

இரண்டாம் உலகப் போர் உச்சத்தில் இருந்த போது 1945ல் ஜெர்மனி தனது தோல்வியை ஒப்புக்கொண்டு சரணடைந்தது. இந்நிலையில் ஹிட்லரும் அவரது மனைவியும் தற்கொலை செய்து கொண்டதாக வரலாறுகள் கூறுகின்றது.


# ரீன் ஏஜ் பருவம் தீராத குழந்தைப் பருவ ஆசைகளை தீர்த்துக்கொள்ளும் பருவம்

## இளையோர் பக்கம் அங்கம் 06

ரீன் - ஏஜ் பருவம் ஒரு (Transitional perid) ஓர் இடைவெளிப் பருவம், தீராத குழந்தைப் பருவ ஆசைகளைத் தீர்த்துக் கொள்ளும் பருவம், குழந்தைகளாக பாவிக்கப்பட விரும்பாத பருவம். அதே சமயம் இளைஞர்களும் இவர்களைத் தங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ள முன்வருவது இல்லை. இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான சூழலில் ஒரு தனித்தன்மையைற்று, மெல்லவும் முடியாமலும் விழுங்கவும் முடியாமல் இருக்கின்ற பருவம் தான் இந்த வளரினப் (adolescence) பருவம். இவர்களைத் தான் நாம் செல்லமாக ரீன் - ஏஜ்ஜினர் என்கின்றோம். இந்தப் பருவத்தில் ஏற்படும் மாற்றங்கள் தாக்கங்கள் இளம் பருவத்திலும், பிற்காலத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

நான் ஒரு பெண், நான் ஓர் ஆண் என்ற உணர்வு சிறுவர் சிறுமியாக வளரும்போது உருவாகி விடுகிறது. ஆண், பெண், குழந்தைகளின் உடல் உறுப்புகளில் வேறுபாடும், அவர்களிடம் சுரக்கின்றன. வெவ்வேறு ஹோர்மோன்களும் பால் இயல்பு வேறுபாட்டிற்கு அடித்தளம். குழந்தைகளின் பாலினத்திற்கு ஏற்ப உடை, விளையாட்டுகள், வேறுபடுகின்றன. சிறுவர் சிறுமியரான நிலையிலேயே என்னென்ன பண்புகள் அவர்களிடம் வளரவேண்டும், எவ்வாறு பிறரோடு பழக வேண்டும், எவ்வித பொறுப்புக்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் எனக் கற்பிக்கின்றனர். தத்தமக்குரிய பால் இயல்பு தனித் தன்மையுடன் சிறுவர், சிறுமியர் வளர்ச்சிப்பாதையில் செல்கின்றனர். பெற்றோரிடையே உள்ள உறவின் தரத்தைப் பொறுத்து பால் இயல்பு மனநிலையும் சிறுவரிடம் உருவாகி வளர்கிறது. ஒருவரை ஒருவர் மதிக்கின்ற பெற்றோர் வெளிப்படையான அன்பை, பரிவைப் பகிர்ந்து கொள்கின்ற பெற்றோரைக் கண்டு பிறபாலாரோடு பழகத் தேவையான நல்ல மனநிலையில் சிறுவர்கள் வளர்கின்றனர்.

பால் இயல்பு என்பது உணர்வு மட்டுமன்று பால் இயல்பைப் பாலுணர்வு மட்டும் என்று கருதலாகாது. பால் இயல்பில் அடங்குபவை உணர்வுகள், எண்ணங்கள், மனநிலை, உறவு கொள்ளும் தன்மை அனைத்தும் பால் இயல்பு ஒரு முழுமை என்பதைக் குறிக்கும் இளமையில் பாலுணர்வு விழிப்படையத் தொடங்குகின்றது. இப்பாலுணர்வு சக்தி வாய்ந்தது. பாலுணர்வால் வரும் உணர்ச்சிக் கொந்தளிப்பால் இளம் உள்ளங்கள். சஞ்சலமடைகின்றன. பாலுணர்வின் வெளிப்பாடுகள் உடலில் முக்கியமாக இன உறுப்புகளைத் தொட்டு இன்பம் தேட விழைவோர் உண்டு. இனிய எண்ணங்கள், கற்பனைகள் தரும் இனிய உணர்வுகளைப் பெண்கள் அதிகம் நாடுவதுண்டு. பிற பாலாரிடம் இயல்பான கவர்ச்சி ஏற்படுகின்றது. பால் இயல்பு என்றால் உடல் இன்பம் மட்டுமே என்ற கருத்து இளைஞர்களிடம் நிலவலாம். பிறரோடு சேர்ந்து பிறபாலாரைக் கேலி செய்வதில் இன்பம் தேட விழைவோர் பலர் சமுதாயம் கொள்ளாத பல செயல்களில் ஈடுபடத் தூண்டும் நண்பர்களோடு சில இளைஞர்கள் தொடர்பு கொள்ள நேரிடலாம். பாலுணர்வு தோன்றுவதால் இளம் பருவத்தினரிடம் ஏற்படும் தாக்கம் பல.



1. எளிதாக உணர்ச்சி வசப்படுகின்றனர்.
2. செய்கைகளில் ஒருவித அமைதியற்ற தன்மை காணப்படலாம்.
3. ஒரு செயலில், படிப்பில் தொடர்ந்து கவனம் செலுத்துவது கடினமாகத் தோன்றலாம்.
4. படிப்பில் காட்டும் ஆர்வம் சிலரிடம் குறைய நேரிடலாம்.
5. தம்மைப் பற்றி குற்ற உணர்வு ஏற்படலாம்
6. குடும்பத்தினர் மீது கொண்டிருந்த பற்று பாச உணர்வு இப்பருவத்தில் சற்று குறைய நேரிடலாம்

பாலியல் பற்றிய பல்வேறு கருத்துக்களை வளர்த்துக் கொள்ளும் பருவம் இப்பருவம் ஆகும். திரைப்படங்கள், புத்தகங்கள், நண்பர்களின் அரைகுறை இரட்டைக் கருத்துப் பேச்சுக்கள் வழியாகவே பெரும்பாலான இளைஞர்கள் பாலியல் அறிவைப் பெறுகின்றனர். இவ்வாறு பெறுகின்ற அறிவு விஞ்ஞான பூர்வமான தெளிவு இல்லாதது முழுமையற்றது. பாலியல்பு பற்றிய அறியாமையும் தவறான கருத்துக்களும் அதிகமான இளைஞர்களிடம் உள்ளது என பாலியல் அறிவு பற்றிய ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

இளைஞர்களிடையே நிலவும் சில தவறான எண்ணங்கள்,

1. பாலுணர்வு அவமானத்திற்குரியது
2. பாலுணர்வை விருப்பம்போல் திருப்திப்படுத்துவதில் தவறில்லை

பாலுணர்வு பற்றி ஒளிவு மறைவாக இன்ரநெற் வழியாக பெற்றுக்கொள்ளும் அறிவு ஆரோக்கியமான உணர்வை யோ, மனநிலையையோ இளைஞர்களிடம் வளர்ப்பதில்லை. உண்மைக்குப் புறம்பான தவறான கருத்துக்களையும், உணர்வுகளையும் வளர்த்துக்கொள்கின்ற இளைஞர்கள் இளம் பெண்கள் பலர் பலவித ஏமாற்றங்கள், துன்பங்கள், உடல் நோய்கள், மனநோய்களுக்கு ஆளாகின்றனர். மணமாகாமல் கருத்தரித்தல், பாலியல் பற்றிய அறியாமையும் தவறான கண்ணோட்டமும் ஆகும்.



பாலியல் பிரச்சனைகளோடு மருத்துவ உதவி, அல்லது உளநல உதவி தேடி வருபவர்கள் பலர். இவர்களில் பெரும்பான்மையோரிடம் பாலியல்பு பற்றி தவறான கண்ணோட்டம் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உணர்வை நெறிப்படுத்தத் தெரியாத ஒருவன் உணர்வுக்கு அடிமையாகி விடுகின்றான். உணர்வுக்கு அடிமையாகின்ற மனிதன் அறிவை இழந்து விடுவது இயல்பு. சிந்திக்கும் தன்மையை இழந்து விட்ட மனிதனுக்கும் விலங்குகளுக்கும் வேறுபாடு இருக்க இயலுமா? பாலுணர்வு நெறிப்படுத்தப்படவில்லையெனில்.

1. பிறருக்கு தீமை விளைவிக்கும் வழிகளில் இவ்வுணர்வு பயன்படுத்தப்படலாம். அதனால் பிறருக்குத் தீமை ஏற்படுவது மட்டுமல்ல தன்மீது கொண்டுள்ள மதிப்பையும் ஒருவன் இழந்து விடுகின்றான்.
2. பெண்களும், சிறுவர்களும் அதிக துன்பத்திற்கும் கொடுமைக்கும் ஆளாக நேரிடும்.
3. அன்பு, மதிப்பு, சுயகட்டுப்பாடு போன்ற உயர்ந்த பண்புகள் மங்கிவிடும்.
4. பால்வினை நோய்கள் எளிதாகப் பரவி விடும்.
5. மனநிலை பாதிக்கப்பட்டு மனநோய் மருத்துவம் தேடவேண்டிய நிலை ஏற்படலாம்.
6. ஆரோக்கியமான உணர்வுகள் தேய்வடையலாம்.

சிறுவயதில் எற்பட்ட க்சப்பான பாலியல் அனுபவங்கள் தாழ்வு மனப்பான்மை, நண்பர்கள் அல்லது திரைப்படங்கள் இன்ரநெற் வாயிலாகக் கற்றுக் கொண்ட தவறான பாலுணர்வுக் கருத்துக்கள் போன்றவை ஒருவருடைய பாலியல் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. ஆளுமைப் பாதிப்புக்குக் காரணமாகின்றன. இவ்வாறு ஆளுமை வளர்ச்சியடையாத சிலர் பாலுணர்வைத் திருப்திப்படுத்த முறையற்ற வழிகளைத் தேடுகின்றனர். சமுதாயம் ஏற்றுக்கொள்ளாத பல செயல்களை மேற்கொள்கின்றனர்.

**இளையோருக்கான தேடல் தொடரும்...**

**அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்**

**"நீ தனிமையில் இருக்கும் போது உனக்கு என்ன தோன்றுகிறதோ அது தானே உன் வாழ்க்கையை தீர்மானிக்கும்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித லூக்கா நற்செய்தி 13 – 16 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- பரிசுகள் முறையே 1ம் பரிசு 500/= 2ம் பரிசு 300/= 3ம் பரிசு 200/=

### கேள்வி பதில்

1. திருச்சட்டமும், இறைவாக்கினர்களும் யாருடைய காலம் வரையிலும் தான் என்று இயேசு பரிசேயர்களுக்கு கூறுகிறார்?

விடை :..........

2. இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே என்று முணுமுணுத்தவர்கள் யார்?

விடை :..........

3. ஓய்வு நாளில் குணப்படுத்துவது முறையா? இல்லையா என்று இயேசு யாரிடம் கேட்டார்?

விடை :..........

4. "அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்" என்று இயேசு யாருக்குக் கூறினார்?

விடை :..........

5. இறையாட்சி எதற்கு ஒப்பிடப்படுகிறது?

விடை :..........

### சரி, பிழை எழுதுக.

6. தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது? ( )

7. மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து மண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும். ( )

8. நேர்மையற்ற அந்த வீட்டுப் பொறுப்பாளர் முன்மதியோடு செயல் பட்டதால் தலைவர் அவரில் கோபம் கொண்டார். ( )

9. நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது ( )

10. இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள். ( )

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

11. அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன் __________ நீங்கள் அனைவரும் அப்படியே __________ என்றார்.

12. தம்மைத் தாமே உயர்த்துவோர் யாவரும் __________ தம்மைத் தாமே தாழ்த்துவோர் __________

13. மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்துக் __________ மகிழ்ச்சி உண்டாகும் என __________ சொல்கிறேன்.

14. __________ ஓர் எழுத்தின் __________ விண்ணும் மண்ணும் ஒளிவது எளிதாகும்.

15. உங்களுள் தம் __________ விட்டுவிடாத எவரும் __________ இருக்க முடியாது.

பெயர் :..........

முகவரி :..........

பங்கு :..........

முடிவுத்திகதி – 10.02.2023

## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி – 52 நீதிமொழிகள் 1 – 15 அதிகாரங்கள்

1. ஒருவர் மேன்மையடைய மேற்கொள்ளும் வழி எது?

விடை :..........

2. ஆண்டவர் விரும்பும் படிக்கல் யாது?

விடை :..........

3. நல்வாழ்வுக்கு வழி யாது?

விடை :..........

4. ஆண்டவர் பூவுலகை எதனால் அடித்தளமிட்டார்?

விடை :..........

5. விவேகமுள்ளோர் யார்?

விடை :..........

6. ஆண்டவருக்கு வெறுப்பைத் தரும் காரியங்கள் எத்தனை?

விடை :..........

7. நேர்மையாளரின் பாதை எவற்றைப் போன்றது?

விடை :..........

8. உலகினின்று பூண்டோடு அழிபவர் யார்?

விடை :..........

9. வளம்பட வாழ்பவர் யார்?

விடை :..........

10. நல்லாரையும் பொல்லாரையும் பார்க்கும் கண்கள் யாருடையவை?

விடை :..........

11. நீதிமொழிகள் நூலின் ஆசிரியர் யார்?

விடை :..........

12. அறிவுரையை எதைப் போல் காத்துக்கொள்ள வேண்டும்?

விடை :..........

13. கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் சொல்லில் சொட்டுவது என்ன?

விடை :..........

14. வாயாடியான, அறிவில்லாத, எதற்கும் கவலைப்படாத ஒரு பெண்ணை எதற்கு ஒப்பிடுவர்?

விடை :..........

15. என் வார்த்தைகளெல்லாம் நேர்மையானவை. அவற்றில் எவை இல்லை?

விடை :..........

பெயர் :..........

முகவரி :..........

தரம் :..........

பங்கு :..........

முடிவுத்திகதி – 10.02.2023

**"நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கின்றது."**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி நிறம்தீட்டுதல்





- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மானவர்களுக்கு.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு – 500/- 2ம் பரிசு – 300/- 3ம் பரிசு – 200/-

பெயர் : ..............................

முகவரி : ..............................

தரம் : ..............................

பங்கு : ..............................

முடிவுத் திகதி : 10.02.2023

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி – 42
## நீதி மொழிகள் ( 4 – 6 ) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| செ | | | | | | | ■ | மெ | |
| | | எ | | | | | வை | | |
| | | | | | நீ | ■ | | | |
| | நெ | ■ | ஞா | நா | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | த | |
| | | | | | ந | | | | |
| | | க | | | ■ | வே | | | |
| வி | | | | | | | வி | ■ | பு |

1. செ___ ___ யுங்___ ள்
2. மெய்___ ___ ர்வு
3. பு___ க்க___ யா___ ர்கள்
4. வி___ மாட்___ ய்
5. வை___ றை ஒ___
6. விழி___ ___ யிரு___ து
7. வி___ கத்___ ட___
8. நெ___ ந்___ லையி___
9. நீ___ த்தொ___ ___
10. எ___ ல்
11. வே___ ன்___ யில்
12. ஞா___ மு___ ளோ___
13. கட்___ ளையை
14. த___ ல்
15. ந___ ___ தனை
16. நாட்___ ங்___ ள்

பெயர் : ..............................

முகவரி : ..............................


பங்கு : ..............................

முடிவுத் திகதி : 10.02.2023

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

பங்குபற்றியவர்கள் – 18 சிறார்கள்

பரிசுக்குரியவர்கள்



1ம் பரிசு 500/= ரூபா
சு. டிஷாகர்
93/3, நீதிமன்ற வீதி
திருகோணமலை

2ம் பரிசு 300/= ரூபா
J. செமாயா
மின்சார நிலைய வீதி
மூதூர் – 07

3ம் பரிசு 200/= ரூபா
கே. ஷத்விகா
பொற்கேணி
தம்பலகமம்

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி – 49
## திருப்பாடல் 61 – 90 அதிகாரம்
## போட்டி முடிவுகள்



பங்குபற்றியவர்கள் : 21 பேர்

மிகச் சரியாக விடையளித்தோர்: 15 குட்டீஸ்

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/= ரூபா
எம். றோஸ்மலர்
மாங்காயூற்று
கன்னியா

2ம் பரிசு 300/= ரூபா
துரைசிங்கம் அன்றன் சசிகலா
6ம் கட்டை, கப்பல்துறை
தம்பலகமம்

3ம் பரிசு 200/= ரூபா
அ. துர்ஷி
25/13 வேளாங்கன்னி வீதி
பள்ளத்தோட்டம்

## புனித லூக்கா நற்செய்தி
## அதிகாரம் 01 – 04
## போட்டி முடிவுகள்

பங்குபற்றியவர்கள் : 30 பேர்

மிகச் சரியாக விடையளித்தோர்: 19 பேர்

1ம் பரிசு 500/= ரூபா
கே. ஷத்விகா
பொற்கேணி
தம்பலகமம்

2ம் பரிசு 300/= ரூபா
எஸ். ஞானகலா
மாங்காயூற்று
கன்னியா

3ம் பரிசு 200/= ரூபா
எம். யுவான் ஜெரமி
125/1, உட்துறைமுக வீதி
உவர்மலை



பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்

"நல்ல வாழ்க்கை நடத்துவதற்கு நல்ல பண்புகளை முறையாகப் பெற்றிருக்க வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்றி என்ற தொழில் அதிபர் கிறிஸ்மஸ் அட்டையை உருவாக்கிய பெருமையை பெறுகிறார். 19ம் நூற்றாண்டில் வசித்த இவர், கிறிஸ்மஸ் சமயத்தில் உறவினர்களுக்குக் கடிதம் எழுத இயலாததால் அட்டையில் படத்தை அச்சிட்டு வாழ்த்தாக அனுப்பினார். ஆயிரம் பேருக்கு அவர் வாழ்த்து அட்டை அனுப்பினார். அதன் பிறகு கிறிஸ்மஸ் சமயத்தில் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் பழக்கம் ஏற்பட்டது. ஹென்றி அனுப்பிய ஆயிரம் வாழ்த்து அட்டைகளை இப்போதும் ஒருவர் லண்டனில் தம் வசம் வைத்துள்ளார்.


## வழிகாட்டிய நட்சத்திரம்

இயேசு கிறிஸ்து அவதரித்ததும் உலகிற்கு அதை உணர்த்த ஒரு பிரகாசமான நட்சத்திரம் தோன்றியது. அப்படியொரு நட்சத்திரம் உண்மையிலேயே தோன்றியதா இல்லை கற்பனை கதையா என்று மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்தன. அதற்கு ஆராய்ச்சியாளர்கள் முற்றுப் புள்ளி வைத்துள்ளனர். இயேசு பிறந்ததும் அதிசயிக்கத்தக்க வகையில் நட்சத்திரம் தோன்றியது உண்மைதான் அதை அறிவியல் பூர்வமாக நிரூபிக்க முடியும் என்று அறிவித்துள்ளனர்.

## திருவருகைக்கால ஜெப ஆராதனையும் ஜெப ஆசீரும்

திருகோணமலை மறைமாவட்ட அருங்கொடைப் பணியகத்தின் ஏற்பாட்டில் மறைமாவட்ட ரீதியான திருவருகைக்கால ஆராதனையானது 02.12.2022 அன்று இறையிரக்க திருத்தலத்தில் மாலை 4.45 மணிமுதல் நடைபெற்றது. அருட்பணியாளர்களான Fr. B. போல் றொபின்சன், Fr.X.I. ரஜீவா, Fr. S. மதுராங்கன் குரூஸ், Fr. S. டக்ளஸ் ஜேம்ஸ் ஆகியோர் இறைமக்களை இறைவார்த்தையின் வெளிச்சத்தில் தியானிக்க வழிநடத்தினார்கள். மறைமாவட்டத்தின் குருமுதல்வாரன அருட்பணி T. கிங்ஸிலி றொபட் அடிகளாரின் தலைமையிலான நற்கருணை ஆசீருடன் நிகழ்வுகள் நிறைவிற்கு வந்தன.







## புனித சதாசகாய அன்னை ஆலயம் அன்புவழிபுரம் (திருகோணமலை)





அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தின் மறைப் பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வானது 11.12.2022 அன்று நடைபெற்றது. அன்றைய நாளில் பங்குத்தந்தை அருட்பணி. டக்ளஸ் ஜேம்ஸ் அவர்களின் 17வது குருத்துவ நிறைவு பங்குமக்களால் சிறப்பிக்கப்பட்டது.

## இறையிரக்கத் திருத்தலத்தில் புனித பவுஸ்தீனாவின் திருவிழா

திருகோணமலை இறையிரக்கத் திருத்தலத்தில் புனித பவுஸ்தீனாவின் வருடாந்த திருவிழா திருப்பலியானது 09.10.2022 அருட்பணி X.I ரஜீவா அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் கொடி இறக்கத்துடன் திருவிழா திருப்பலியானது நிறைவடைந்தது.





## அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தில் அருட்பணி யூட்ஜோன்சன் அடிகளாருக்கு வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

குருத்துவ வாழ்வில் தனது 25வது ஆண்டை நிறைவு செய்த அருட்பணி யூட் ஜோன்சன் அடிகளாருக்கு அன்புவழிபுரம் பங்குத்தந்தை அருட்பணி சூ. டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளாரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பங்கு மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறிய விழாக் கொண்டாட்டத்துடன் நிகழ்வுகள் நிறைவடைந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org